# பனுவல்

சமூக
பண்பாட்டு
விசாரணை

ஐந்தாவது இதழ்
2007

சமூக பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான
கொழும்பு நிறுவனம்.

## உள்ளடக்கம்

**நுழைவாயில்** 01

– பனுவல் ஆசிரியர் குழு

படமும் பாடமும்: 05
காலனிய யாழ்ப்பாணத்தில் ஓவியத்தில் நவீனத்துவமும்
இருமை நிலையும்
– தா.சனாதனன்

வட இலங்கையில் மது விலக்குப் போராட்டம்: 34
தமிழ் அரசியல் தலைமைத்துவமும், சமூக யதார்த்தமும் 1900–1936
– சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்

பாலங்களாக மணப்பெண்கள்: 63
இடப்பெயர்வுகள், பாத்திரங்கள், ஆவணங்கள்
மற்றும் எதிர்பார்ப்புகளினூடே தமிழ்த்தன்மை
– சித்தார்த்தன் மௌனகுரு

உடல் அரசியல்(கள்): 100
நவீன இந்தியாவில் தேசப்படங்கள் மற்றும் பெண் கடவுளர்கள்
– சுமதி ராமசுவாமி

**பனுவல் நூல் திறனாய்வு**
யாழ்ப்பாணத்துப்பண்பாட்டில் மடமும் மடக்கட்டடக்கலையும் 136
– ச.கார்மேகம்

வரலாற்றைக் கட்டுதலும், அவிழ்த்தலும் :
இலங்கை வரலாறு தொடர்பான 141
கலாநிதி கா.இந்திரபாலாவின் மறுவாசிப்பு
– பாக்கியநாதன் அகிலன்


**கலைச்சொற்கள்** 158

# வரலாற்றைக் கட்டுதலும், அவிழ்த்தலும் : இலங்கை வரலாறு தொடர்பான

## கலாநிதி கா.இந்திரபாலாவின் மறுவாசிப்பு

2007, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
பக்கங்கள் 418
விலை: இந்திய ரூபாய் 200

**புத்தகத்திறனாய்வு : பாக்கியநாதன் அகிலன்**




> கடந்த காலத்தினுடைய படிமம் என்பது வரலாற்றாசிரியனின் எதிர்காலத்திற்கான பங்களிப்பாகும். இந்தப் படிமமானது அவனது சமகாலத்தவரால் அரசியல் தொன்ம உருவாக்கத்திற்காகப் பயன்படுத்தப்படலாம் என்பதோடு அத்தகைய அரசியல் முன்னெறிவுகள் வரலாறுகள் மற்றும் சமூகவிஞ்ஞானிகளிடமிருந்து புலமை ரீதியான நியாயப்படுத்தல்களையும் கோரி நிற்கின்றன.
>
> (தாப்பர் 1975:4)

## அறிமுகம்

கலாநிதி கா.இந்திரபாலா, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் (தற்போதைய பேராதனைப் பல்கலைக்கழகம்) உற்பத்தியாவார். இலண்டன் பல்கலைக்கழகத்திற் கலாநிதிப் பட்டம்பெற்ற அவர், பேராதனைப் பல்கலைக்கழகம் (1960–1975), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (1975–1983)

ஆகியவற்றில் பணியாற்றியதுடன், 1977/78 காலப்பகுதியில் தோக்கியோ வெளிநாட்டியற் பல்கலைக்கழகத்தில் அதிதிப் பேராசிரியராகவும், 1984இல் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் முதலாவது தென்கிழக்காசியவியல் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார். "ஒரு வாழ்க்கைக் காலம் முழுவதிலும் பலரிடம் இருந்து கற்ற கல்வியும், பெற்ற திறன்களும் இந்நூலை உருவாக்க உறுதுணையாய் இருந்துள்ளன...." (பக்கம் 06) என இந்நூலைத் தன் வாழ்நாள் உழைப்பின் விளைபொருளாய் இந்திரபாலா எடுத்துக்கூறுகிறார். பாளி, சமஸ்கிருதம், சிங்களம், ஜேர்மன், ஜப்பானிய மொழியறிவுடைய இந்திரபாலா அவர்கள் இலங்கையில் வரலாறு – தொல்லியல் துறைசார்ந்து உருவான புலமையாளர்களில் முன்வரிசையைச் சேர்ந்த ஒருவராவார். லண்டன் பல்கலைக்கழகத்திற்கு அவரால் சமர்ப்பிக்கப்பட்ட கலாநிதிப்பட்ட ஆய்வில் தமிழ் குழும உருவாக்கம் தொடர்பாக அவரால் அப்போது முன்மொழியப்பட்ட கருத்துகளின் பொருட்டாக 'சிங்கள மைய' எழுத்தாளர்களுக்கு உவப்பான வராகவும், அதே சமயம் ஏனையோரிடமிருந்து அது தொடர்பில் காரசாரமான எதிர்வினைகளையும் எதிர்கொண்டவராகவும் அவர் இருந்தார். தற்போது தமிழில் வெளிவந்த 'இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு பொ.ஆ.மு 300 – பொ.ஆ 1200 கிறீஸ்து வருடம் என்ற பெயரிடலுக்குப் பதிலாக (பொ.ஆ – பொது ஆண்டு என்பதை அவ்வாறு குறிப்பிடுகிறார்) என்ற மேற்படி நூலுக்கு முன்னோடியாக 'The Evolution of Ethnic Identity: The Tamils in Sri Lanka 300 BCE 1200 CE (2005) எனும் ஆங்கிலநூல் அமைந்ததென நூலாசிரியர் அறிவிக்கிறார்.

இத்திறனாய்வு முழுக்க முழுக்க அவரது தமிழ்நூலை அடிப்படையாகக் கொண்டது. வரலாறு – தொல்லியல் என்பன தொடர்பான புலமைப் பின்புலமோ, விபர ஞானப் பின்னணியோ அற்ற ஒரு பொதுவாசகனின் பிரதிபலிப்பாகவே இத்திறனாய்வு எழுதப்பட்டுள்ளது. இதன் காரணத்தால் அவர் குறிப்பிடுகின்ற தடயப்பொருட்களைப் பரிசோதித்தலோ, அவை தொடர்பான மாற்றுக் கருத்து முன்வைப்புகளையோ இத்திறனாய்வு செய்ய முற்படவில்லை. பதிலாக இவ்விடயத்தினை அவர் முன்மொழிகின்ற – கட்டமைக்கின்ற முறையியல் தொடர்பான கருத்தாடலாகவே இத்திறனாய்வு அமைகின்றது.

## இனக்குழுமச் சட்டகம்

இலங்கை வரலாற்றெழுத்துக்களின் பிரதான போக்கானது, காலனிய வரலாற்று எழுத்துக்களின் கருத்தாடற் சட்டகத்தை அடிப்படையாகக் கொண்டது.

இவ்வகையில் மேற்படி எடுத்துரைப்புகள் யாவும் இனம் (race) பற்றிய முற்கற்பிதத்தை[1] அடித்தளமாகக் கொண்டவை. இவ்வகையிற் சிங்கள இனம் X தமிழினம் என்ற எதிரிடைகள் மேல் நடமாடுபவை.

இவற்றிற்கு மாறாக, இந்திரபாலா அவர்களின் மேற்படி நூல் இனம் பற்றிய கருத்தாடலுக்குப் பதிலாக இனக்குழுச் (ethnic group)[2] சட்டகத்தைப் பிரயோகிக்கிறது. இதனூடாக இலங்கை வரலாற்று எழுத்துக்களில் ஆட்சி செலுத்தும், காலனிய வரலாற்று எழுத்து மாதிரியை விட்டு நீங்கிச் செல்கிறது. இந்த அடிப்படையான நீங்குதலே, அதன் விரிவுக்கும் ஆழத்திற்குமான பாதையையும் திறந்து வைக்கிறது.

மனித குலம் தொடர்பான மொழி, வாழிடம், வாழ்க்கை முறை, நம்பிக்கைகள் முதலான அனைத்துப் பௌதிக மற்றும் கருத்து ரீதியான அடையாளங்களுக்கு அப்பால், தனியாள் ஒருவருடைய அல்லது இனக்குழுவினுடைய 'அடையாளம் என்பது அடிப்படையில் ( அவரின் /அவர்களின்) ஒரு பிரக்ஞையே' என்ற முன்மொழிவுக்கு இந்திரபாலா செல்கிறார். இந்த அடிப்படையிற்றான் தமிழ்பேசுமொருவர், தன்னைத் தமிழரல்லாத வேறொரு இனக்குழுவாக (உதாரணமாக இஸ்லாமியர்கள்) இனங் காண்பதும், தமிழேயறியாத ஒருவர் தன்னைத் தமிழராகப் பிரகடனஞ் செய்தலும் (உதாரணமாக ஆபிரிக்கத் தமிழர்போல ஆ+ர்) நிகழ்கிறதென அவர் எடுத்துக் காட்டுகிறார் (பக்கம் 25). இதன்மூலம் அடையாளம் தொடர்பான அரசியலை அதன் சாராம்சத்தில் இந்திரபாலா அவர்கள் புரிந்துகொள்கிறார். இந்தப் புரிதல் மானுட இயக்கத்தினைப் புறவயமாக நின்று சொல்லுவதற்கான தளத்தைப் பெருமளவுக்கு அவரிடம் ஏற்படுத்துகிறது.

இந்தத் தெளிவான இனக்குழுமம் பற்றிய புரிதலுடன் இலங்கையில் தமிழ் இனக்குழும உருவாக்கத்தை வாசிக்க முயலும் இந்திரபாலா அவர்கள், அதனைக் கட்டியெழுப்பப் பயன்படுத்தும் தடயப்பொருட்கள் ஊடாகச் சிங்கள இனக்குழும உருவாக்கத்தினையும் சேர்த்தே கட்டுகிறார். இலங்கையில் வாழும் சிங்களவர் இனக்குழுவும், தமிழர் இனக்குழுவும் எவ்வாறு தோன்றிப் பரிமாணம் அடைந்தன என்பதை அறிவதற்கான ஆழ்ந்த ஆய்வு எதுவும் அண்மைக்காலம் வரை நடாத்தப்படவில்லை எனக் கூறும் இந்திரபாலா அவர்கள், இலங்கை இனக்குழுமங்கள் தொடர்பான மேற்படி எழுத்துக்கள் யாவற்றினதும் முடிந்தமுடிவான முடிவினைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

இலங்கை வரலாற்றை எழுதிய வரலாற்றாசிரியர்கள், இலங்கை வரலாறு தொடங்கியபோது இத்தீவில் வாழ்ந்தோர் சிங்கள மக்கள் என்றும், தமிழரும் பிற இனக்குழுவினரும் பின்னர் வந்தோர் என்றும் கொள்ளும் ஓர் எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதியுள்ளனர்...." (பக்கம் 27)

இதனூடாக இலங்கைத்தீவை, இரத்தத்தீவாக மாற்றி வைப்பதில் மிகப் பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கும் பெருங்கதையாடலை – 'மண்ணின் மைந்தர்கள்' எனும் கோட்பாட்டைத் தனது வாசிப்புக்களினூடாக இடைவிடாது அவர் கேள்விக்குட்படுத்திச் செல்கிறார்.

## இலங்கை வரலாற்றெழுத்தியல்: மாறாத அச்சின் வார்த்தைகளும், பிறவழிப் பயணங்களும்

வரலாற்று எழுத்துக்களை, அவற்றின் போக்கு, அடிப்படை எண்ணக்கரு வழிநின்று விசாரணை செய்யுமொரு துறைசார் ஒழுக்கமாக வரலாற்றெழுத்தியல் காணப்படுகின்றது. உதிரியான சில விலகல்கள் போக, இலங்கை வரலாற்று எழுத்துக்கள் யாவும் ஒரே அச்சிலேயே வார்த்தெடுக்கப்படுகின்றன என்பதுடன் சமகால அரசியல் தேவைகளுக்கு குற்றேவல் புரிவனவாகவும், அதன் காரணத்தால் அரசியற் சக்திகளாற் போஷிக்கப்படுவனவாகவுமுள்ளன. துரதிஷ்டவசமாக இலங்கையில் இனக்குழுக்களிற்கு இடையிலான யுத்தகளத்தில் இலங்கை வரலாறும் கவசவுடை தரித்து, வாளேந்தி முன்னணிப் படைவீரர்களுள் ஒருவனாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை வரலாறு தொடர்பில் எவ்வாறு மாற்றெழுத்துக்கள் குறைவோ, அதுபோலவே இவ்வெழுத்துக்கள் தொடர்பான அறிவியல் பூர்வமான வாசிப்புக்களும் குறைவாகவே காணப்படுகின்றன. இந்நிலையில், சற்றுச்சுருக்கமாக, ஆனால் மிகத் துல்லியமாக, இலங்கை வரலாற்றெழுத்தியலைப் பகுப்பாய்வு செய்வதனூடாக இலங்கை வரலாற்று எழுத்துக்களின் பயணப்பாதையைப் புரிந்து கொள்வதோடு, அவற்றைக் கட்டுடைத்து வாசிப்பதற்கான தளத்தையும் இந்திரபாலா தயாரிக்கிறார்.

இப்பின்னணியில் இலங்கை வரலாற்றெழுத்தியலை அவற்றின் காலம், தடயப் பொருட்களை வியாக்கியானிக்கும் முறைமை என்பவற்றின் ஊடாக மூன்று வகையாகப் பிரித்துப் பார்க்கிறாரெனலாம்.

- காலனியகாலப் படைப்புக்கள்
- பேராசிரியர் பரணவிதானவின் எழுத்துக்கள்
- பேராதனை அறிஞர் குழாத்தின் எழுத்துக்கள்

முதலிரண்டு எழுத்துக்களுக்குமிடையிற் பேரளவில் வித்தியாசங்கள் இல்லை. ஆரிய – சிங்கள[3] மையமுடைய காலனியகால எழுத்துக்கள் இனவியல்சார்(racial) முற்கற்பிதமும், பிரித்தானியரின் பிரித்தாளும் பொறி நுட்பத்தினையும் கொண்டமைந்தவை. பேராசிரியர் பரணவிதானவின் எழுத்துக்கள் மேற்படி எடுகோளை மேலும் விரித்தும் – வளர்த்தும் எடுத்துச் செல்வதுடன், ஆழமான இனவாதக் கண்ணோட்டத்தினையும் அவற்றிற்கு வழங்குவதுடன், வரலாற்றைச் சிங்களத் தேசியத்திற்கான விசுவாசமான சேவகனாகவும் ஆக்கி வைப்பதனை எடுத்துக்காட்டும் இந்திரபாலா அவர்கள், இந்நிலைவரத்திற்கெதிரான மாற்றுப்பார்வைகள் ஒப்பீட்டளவிற் பேராதனை அறிஞர் குழாத்தினரால் ஆக்கப்பட்டுள்ளதாக எடுத்துக்காட்டுகிறார். இவ்வகையில் லெஸ்லி குணவர்த்தன, ஸுதர்ஷன் ஸெனெவிரத்ன என்போர் இவர்களுள் முக்கியமானவர்கள் எனக்கருதுகிறார். இதே நேரம் பேராதனை மையத்திற்கு வெளியே பணியாற்றிய கலாநிதி ஸிரான் தெரணியகலவும், பேராசிரியர் ஸேனக பண்டாரநாயக்கா மற்றும் பேராதனையின் உருவாக்கமான அமரதாஸ லியனகமகேயும் இவர்களோடு வைத்தெண்ணத்தக்கவர்களென அவர் வலியுறுத்துகிறார். கலாநிதி இந்திரபாலா கூடப் பேராதனை அறிஞர் குழுமத்தின் நீட்சியும் உற்பத்தியும் தான்.

இந்த வரலாற்று விவாதங்கள் பலவற்றுள்ளும் அதிகம் சம்பந்தப்படும் இன்னொரு பெயர் மகாநாம தேரருடையது. மகாவங்ஸ நூலாசிரியரான அவர் ஒரு புறம் வழிபாட்டிற்குரிய நபராகவும், மறுபுறம் இலங்கை வரலாற்றைத் திரித்த முன்னோடிகளுள் பிரதானமான ஒருவராகவும் குற்றஞ்சுமத்தப்பட்டவர். பொதுவாக பொ.ஆ. 5இல் எழுதப்பட்டதாகக் கருதப்படும் மகாவங்ஸ நூல் தொடர்பான விவாதத்தினைச் செய்வதனூடாக இலங்கை வரலாற்றெழுத்தியலை மேலும் விரிவாக இந்திரபாலா திறந்து வைக்கிறார்.

ஒருவகையில், இந்திரபாலா இவ்விரண்டு வாதங்களுக்கும் அப்பாற் சென்று, மகாநாமருடைய தரப்பிலிருந்து பேசுகிறாரெனலாம். சிங்களத் தேசியவாதிகள் ஒருபுறம் மகாநாமரைத் தமக்கேற்றபடி கையாள, அதனை எதிர்ப்போர் மகாவங்ஸ நூலையே படியாது அதனை எதிர்ப்பதாகக் குற்றஞ்சுமத்தும் இந்திரபாலா மகாவங்ஸத்தினை அடிப்படையில் மகாவிகாரை

பற்றியவொரு தல புராணமாகவே புரிந்துகொள்ளவேண்டும் எனக் குறிப்பிடுகிறார். எல்லாளன், துட்டகாமினி தொடர்பான கதையிற்கூட மகாநாமர் மிக மதிப்புடனேயே இருவரையும் கையாண்டிருப்பதனை எடுத்துக்காட்டும் அவர், துட்டகாமினியை காவியநாயகனாக்கும் மகாவங்ஸ அத்தியாயமானது அதன் மொழி மற்றும் கட்டமைப்பு வழிநின்று பார்க்கும்போது ஓர் இடைச்செருகலாகவே தென்படுவதாகவும் எடுத்துக் காட்டுவதுடன் பேராசிரியர் பரணவிதான அவர்களே மகாவங்ஸ கதைகளுக்கு இனவாத முலாம் பூசுதலில் அதிக பங்கையாற்றியதாகவும் கூறுகிறார் (பக்கம் 40–46).

## தொல்லியல்: அகழ்தல், திரித்தல் மற்றும் மூடிமறைத்தல்

> "வேறும் பல நாடுகளில் நடப்பதுபோல, இலங்கையிலும் கவலை நிரவிய வகையில் தொல்லியற் சான்றுகளுக்குக் கொடுக்கப்படும் விளக்கங்கள் அரசியற் பின்னணியில் வைத்துக் கொடுக்கப்படுவதைக் காணலாம். தொல்லியல் சார்ந்த சில முக்கிய ஆய்வுகளில், சிக்கலான சில விடயங்கள் மிகவும் இலகுபடுத்தப்பட்டு, அரசியல் நோக்குடையோர் குறுகிய மனப்பான்மையுடன் அவற்றைப் பயன்படுத்தக் கூடியவகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்" (பக்க 49,50).

இலங்கைத் தொல்லியலாய்வுகள் பெருமளவிற் பேரினக் கதையாடல் எனும் முற்கற்பித்தலினால் எதிர்கொள்ளப்படல், தடயப்பொருட்களை அறிந்தே திரித்தல், இனக்குழும முறுகல் நிலைமைகளுக்குள் கிடைத்திருக்கக் கூடிய தடயப்பொருட்கள் எதிர்த்தரப்புக்குச் சாதகமாக அமையக் கூடியதோ என்ற ஐயத்தில் மூடிமறைத்தல் – அழித்தல் முதலான அரசியற்படுத்தப்பட்ட நிலைவரங்களின்கீழ் இலங்கையில் தொல்லியல் என்பது மிகவும் பாதிக்கப் பட்டதை எடுத்துக்காட்டும் இந்திரபாலா அவர்கள் தடயப் பொருட்களின் மீதான மறுவாசிப்பின் இன்றியமையாமையைக் குறிப்பிட்டு, அது இலங்கை வரலாற்று எழுத்தையும் மறுவாசிப்புச் செய்ய உதவுமென எடுத்துக்காட்டியுள்ளார்.

இதேநேரம் சமகால அறிவியல் வளர்ச்சி காரணமாக வாழும் மனிதவுடலைக்கூட ஒரு தொல்லியற்றலமாக அகழமுடியுமென்பதை இந்திரபாலா எடுத்துக் கூறுகிறார். மனிதகுலப் பெயர்ச்சிகள் முதலானவற்றை வாசித்தறிய, வாழும் உடலில் நிகழ்த்தும் DNA பரிசோதனைகள் உதவுமென்பதை எடுத்துக்காட்டும் அவர் தொல்லியலின் பரிசோதனைத் தலங்களை இவற்றின்மூலம் மேலும் விரித்துவிட முடியுமெனக் காட்டுகிறார்.

இது ஒரு புறமிருக்க, அண்மைக் காலத்தில் நிகழ்ந்த புதிய 'அகழ்வுகள்' வழி பெறப்பட்ட சான்றாதாரங்கள் வழியான மறுவாசிப்புக்கள் அல்லது அதற்கான பெரு வாய்ப்புக்கள் கூட மையக் கருத்தாடற் களத்தினுள் வராது போவதனையும் அல்லது தேசாபிமான நிலைவரங்களின்கீழ் திட்டமிடப்பட்டே அவை மறைக்கப்படுதல் என்ற பொதுப்போக்கும் புதிய கருத்தாடல்களுக்கான சந்தர்ப்பங்களையும் மூடிவிடுகிறதென்பதையும் அவர் கோடி காட்டுகிறார்.

இதேவேளை, தொல்லியல் அகழ்வுகள் தொடர்பான முறைசார் பயிற்சி அற்ற, தொழின்மை சாராத ஆர்வ முயற்சிகளும் இன்னொரு வகையில் அகழ்வாய்வு அறிவியலை பாதித்துவருகின்றன.

## மொழி – மொழியியல் : பற்றும், யதார்த்தமும்

மொழியொரு வரலாற்று யதார்த்தம். மொழியியல் என்பது மொழியையும் – மொழிதல்களையும் அறிவியல் பூர்வமான வாசிப்பிற்குள்ளாக்கும் ஒரு துறைசார் ஒழுக்கமாகும். மொழியை மேற்படி அறிவியல்பூர்வமான தளத்திலிருந்து அணுகாமல் அதனைப் பல்வேறுபட்ட முற்கற்பிதங்களோடு விசாரணைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு பொருளாகக் கொள்ளுதல் என்ற நிலைவரங்கள் இனக்குழும உருவாக்கத்தினை மொழியியலூடாகப் பார்த்தலென்பதைப் பெரிதும் தடைசெய்துள்ளன. இந்த நிலைவர உருவாக்கத்திற் காலனியகால ஆரிய x திராவிட இனச்சட்டகமும்[4] முக்கியமான இடத்தினைச் சந்தேகமில்லாது வழங்கியுள்ளது. மறுபுறம் மொழியைத் தெய்வீக நிலைப்படுத்தும் செயற்பாடுகளும் அதனை மேலும் அரண் செய்துள்ளது. இனம் + மொழி என்ற இணைவுச்சட்டகம் இலங்கை இனக்குழும அரசியல் நிலைவரங்களின் பின்னணியில் மேலும் மேலும் தொன்மநிலைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கேள்வியும் – விசாரணையுமற்ற நிலைமைகளுக்குள் எம்.எச்.பீட்டர் ஸில்வா, ஸுகதபால த சில்வா, ஜேம்ஸ் கெயர், டபிள்யூ எஸ்.கருணாதிலக, சி.ஈ.கொடம்கும்பர ஆகியோரது சிங்கள மொழி தொடர்பான ஆய்வுகள் முக்கியமானவை என இந்திரபாலா எடுத்துக்காட்டுகிறார்.

இவர்களது ஆய்வுகள் சிங்கள மொழிக்குள் இருக்கும் திராவிட மொழிப் பண்புகளை எடுத்துக்காட்டியதுடன், சிங்களமும் – தமிழும் இலங்கையிற்

பேசப்படு முன் இந்தோ – ஆரிய அல்லது திராவிட மொழிக் குடும்பத்தினைச் சாராதவொரு மொழி அல்லது பலமொழிகள்இலங்கையில் வழக்கிலிருந்ததையும் இந்திரபாலா சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால் இப்பாதையிற் தொடர்ந்து சென்று நிகழ்த்தப்படாத ஆய்வுகள் மொழியியலில் மட்டுமன்றி, வரலாற்றுத் தடயங்களை அர்த்தப்படுத்துவதிலும் ஏற்படுத்திய பின்னடைவை அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> இந்து ஆரியமொழிகள் மற்றும் திராவிட மொழிகள் இலங்கைக்குப் பரவுமுன், அங்கு வேறு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மொழிகள் பேசப்பட்டன என்பதை மறுக்கமுடியாது. எனினும், இலங்கையின் மிக முற்பட்ட கல்வெட்டுக்களின் மொழியை ஆராய்ந்தோர் இவ்விஷயத்தைப் பொதுவாகப் புறக்கணித்துள்ளனர். இப்பழைய கல்வெட்டுக்களில் பல சொற்கள் இலகுவிற் பொருள்கண்டு கொள்ளக்கூடிய சொற்கள் அல்ல எனினும் இவற்றை எப்படியாவது இந்து ஆரிய மொழிச் சொற்களின் வழிவந்தவையாகக் காட்டப் பலர் முனைந்துள்ளனர். வேறு சிலர் அண்மைக்காலத்தில் எந்தவித சிரமமுமின்றித் திராவிடமொழிச் சொற்களாக இவற்றை அடையாளங்காணத் தயங்கவில்லை. இச் சொற்களுள் ஒரு சில ஆவது இடைக்கற்கால மக்கள் பேசிய மொழிகளைச் சேர்ந்தவையா என்று ஆய்வுசெய்ய அவர்கள் எண்ணவில்லை. சிங்கள மொழியின் ஆக்கத்துக்கு மட்டுமன்றித் தமிழின் வளர்ச்சிக்கும் இடைக்கற் காலத்து மொழிகள் பங்களிப்புச் செய்துள்ளன என்பதில் ஐயமில்லை (பக்கம் 57 ).

மேற்படி வேறுபட்ட மொழிப் பயில்வுகளின் இருப்பினைப் பற்றிப் பேசும் இந்திரபாலா அவர்கள் இந்த வாதங்களினை அடியொற்றி 'இலங்கை' என்ற பெயர்கூடத் திராவிட அல்லது இந்தோ ஆரிய மொழியிலிருந்து உருக்கொள்ளாத ஒன்றென்றும், அதுவொரு முண்டா[5] மொழிக் குடும்பச் சொல்லெனவும் கூறுகிறார்(85–86). இந்த வாதங்கள் மொழித்தூய்மைவாதங்கள் – அதிகாரபூர்வமான மொழி முதலான கற்பிதங்களைப் பேரளவில் உடைத்துவிடுகின்றன.

இந்தக் கருத்தாக்கங்களின் தொடர்ச்சியாக இந்திரபாலா அவர்கள் சுட்டும் இன்னொரு முக்கிய கோட்பாடு 'தாய் மொழி மாற்றமெனும்' கோட்பாடாகும். ஒரு மொழி பயில்நிலையிலிருந்து அற்றுப்போய், இன்னொரு மொழி அவ்விடத்தினைப் பெறுதல் இதன் பிரதானமான அம்சமாகும். இதனை 'உயர்குழாமாக்கம்' அல்லது 'உயர்குழாத்தாதிக்கப்படர்ச்சி' என்பதனூடாக

மொழியியலாளர்கள் விளக்க முற்படுகின்றனர். மேற்படி ஆய்வுகளின் வழித்தடமூடாக நகரும் இந்திரபாலா அவர்கள், இலங்கையிலும் பரந்த தென்னகப் பெரும்பாண்டாக்கத்திலும் இது நிகழ்ந்திருப்பதாகக் கூறுகிறார். அதாவது "மொழி மாற்றங்கள், மக்கள் மாற்றங்களின்றியே நடைபெறலாம்" என்ற ரொலின் கோனிங்ஹின் வரிகளை மேற்கோளாக்கி இந்திரபாலா இதனை விளக்க முற்பட்டுள்ளார் (பக்கம் 61). இருமொழிபேசல், ஒரு மொழியழிதல், ஒன்றுளொன்று கலத்தல், புதியது அழிவுற்ற பழையதின் சில கூறுகளைச் செரித்திருத்தல் என மொழியினுள் இருக்கக்கூடிய வரலாற்றசைவியக்க வாய்ப்புகளை அவர் முன்னிலைப்படுத்துவதினூடாகவே வரலாற்றினை மொழியியலூடாகப் பயிலமுடியுமெனக் கோடிகாட்டுகிறார். மேற்படி கருத்துகள் தொடர்பான கீழ்வரும் அவரது நூற்பகுதியை எடுத்துக்காட்டுவதன்மூலம் இந்த நிலைமையை மேலும் விளக்கமுடியும்.

> அக்காலகட்டத்தில் மொழியையும் இனக்குழுவையும் சமன்செய்ய முடியாது. அதாவது ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசியோர் ஒரு குறிப்பிட்ட இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்று சமன்படுத்த முடியாது. பிரித்தானியா போன்ற இடங்களின் வரலாற்றிலிருந்து இதனை நன்கு உணரலாம். ஆகவே, இந்து ஆரியமொழியாகிய பிராகிருத மொழியை இலங்கையில் ஆதிகாலத்தில் பேசிய அனைவரும் 'இந்து ஆரியர்' என்று சமன்படுத்துவது தவறாகும். இப்படிக் கூறுவோர், வடஇந்தியாவில் இந்து ஆரிய மொழியைப் பரப்பிய மக்களே இலங்கைக்கும் வந்தனர் என்ற தப்பான கருத்தைக் கொண்டுள்ளனர். இந்தியத் துணைக்கண்டத்தில் இந்து ஆரிய மொழிகள் அங்கு முன்னர் வாழ்ந்த பல்வேறு இனக்குழுக்கள் மத்தியிற் பரவி, அவர்கள் மொழிகளுக்குப் பதிலாகப் புதிய தாய்மொழிகளாயின. அதாவது, அங்கும் தாய்மொழி மாற்றம் மூலமே ஆதிமக்கள் மத்தியிற் புதிய இந்து ஆரிய மொழிகள் பரவின. இவ்வாறே, திராவிட மொழிகளும் பல்வேறு ஆதி இனக்குழுக்கள் மத்தியில் தென்னிந்தியா மற்றும் இலங்கை ஆகிய இடங்களிற் பரவி, அவர்கள் தாய்மொழிகளாகின (பக்கம் 63).

## புவியியல் எல்லைகளும், பண்பாட்டெல்லைகளும்: இலங்கைத் தீவைப் பிரிக்கும் கடலும், இணைக்கும் கடலும்

இந்த நூல் முன்மொழியும், மிக முக்கியமான இன்னொரு கருதுகோள் இலங்கைத்தீவின் சமூக – இனக்குழுமப் பண்பாட்டு உருவாக்கத்தினை 'தென்னிந்தியப் பொதுப்பண்பாட்டுப் புலத்தில் நிறுத்தி வாசிக்கவேண்டும்' என்பதாகும். தென்னிந்தியாவுடனான இலங்கைத்தீவின் நெருக்க உறவை

இனக்குழும அரசியலின் பேரினவாத இனக்குழுமக் கண்ணோட்டப் பின்னணியில் கட்டியெழுப்பும் பெருங்கதையாடல் (விலகலாக ஸுதர்ஷன் ஸெனவிரத்தினவின் ஆய்வு முதலியவற்றைக் கூறுகிறார்) காரணமாக இலங்கை வரலாற்றைப் புரிந்து கொள்ளுவதற்கான மிகமுக்கியமானவொரு இழை அறுக்கப்பட்டிருப்பதாக இந்திரபாலா கூறுகிறார்.

இற்றைக்கு 7000 வருடங்களுக்கு முன்பாக இலங்கைத்தீவு தென்னிந்தியப் பெரும்பரப்புடன் பௌதிக ரீதியாக இணைந்த ஒன்றாக இருந்தது எனவும், அதனால் இப் பிராந்தியத்தை 'தென்னிந்தியா – இலங்கைப் பிராந்தியம்' என அழைக்கலாம் எனவும் கூறுவதோடு பெருங்கற்பண்பாட்டு உருவாக்கம் இப்பகுதிகள் யாவற்றிலும் ஒரே சமயத்திலேயே நிகழ்ந்தது எனவும் கூறுகிறார். அதேசமயம் வட இந்தியப் பகுதியை மக்கள் வாழிடமாக்குவதற்கு முன்பாகவே, மேற்படி தென்னிந்தியப் பெரும் பண்பாட்டுப் பிராந்தியத்தில் மக்கள் நடமாட்டம் ஆரம்பமாகி விட்டது எனவும், பெருமளவில் ஆபிரிக்கப் பிராந்தியத்தில் இருந்து புறப்பட்ட முதல் மக்களின் வாழிடங்களில் இப்பிராந்தியமுமொன்றாக இருந்த தெனவும் வாதிடுகிறார் (பக்கம் 70) இலங்கையில் சிங்களவரும் – தமிழரும் மேற்படி பொது முன்னோர்களில் இருந்து உருவான இரு இனக்குழுமங்கள் என அவரெடுத்துக்காட்டுகிறார் என்பதோடு இவ்விரு இனக்குழுமங்களின் உருவாக்கமும் இலங்கைத் தீவிலேயே நடந்தேறியது எனவும் கூறுகிறார். இதன் மூலம் தமிழரையும், அவரையொத்த சிறுபான்மைக் குழுக்களையும் வந்தேறு குடிகளாகப் பார்க்கும் பேரினவாதக் கதையாடல்களை நிராகரிக்கிறார்.

இலங்கையொரு தீவாகி, தென்னகப் பெருவலயத்திலிருந்து இயற்கையால் பிரித்தெடுக்கப்பட்டபோதுகூட, இலங்கையைச் சுற்றியுள்ள கடலென்பது தென்னகப் பெருவலயத்தினையும் – இலங்கையையும் பிரிக்காது, இணைக்குமொரு கடலாகவே பேரளவிற் தொழிற்பட்டது என்று இந்திரபாலா வாதிடுகிறார். அதாவது, இன்றைய புவியியல் எல்லைகள், நடைமுறைகளின் வழியே பண்டைக்காலப் புவியியல் எல்லைகளையும் – நடைமுறைகளையும் புரிந்துகொள்ள முயற்சிப்பது அறிவியல் பூர்வமானதல்ல என்பதை இதனூடாகச் சுட்டிக் காட்ட முயற்சிக்கிறார்.

இதேவேளை, இலங்கை வரலாற்றினைப் புரிந்துகொள்வதில் தென்னகப் பெருவலயம் எவ்வளவு முக்கியத்துவமுடையதோ, அதேயளவு முக்கியத்து வமுடையது இலங்கையைத் தென்னாசியப் பகைப்புலத்தில் வைத்துப்

பார்த்தலுமாகும் என்பதை வற்புறுத்துகிறார். இவற்றினூடாக எல்லாக் காலங்களிலும் புவியியல் எல்லைகள், பண்பாட்டு எல்லைகள் அல்ல என்றவொரு கருதுகோளை அவர் நிலைநாட்ட முயற்சிக்கிறார் எனவும் வாதிடலாம்.

## இலங்கையில் 'பெருமதங்கள்': அரசியல் புராணிகம்

இலங்கைத் தீவிற் பௌத்த, சைவப் பெருமதங்களினைச் சுற்றியே மதந்தொடர்பான கதையாடல்கள் சுற்றிக்கட்டப்படிருப்பினும், சமண, ஆசிவக மதங்கள் மற்றும் பிற சிறுவழிபாட்டு மரபுகளும் ஊடாடிச் சென்றதையும், ஒன்றுளொன்று கலந்துகொண்டமையும் கட்டுடைத்துப் பார்த்தல் என்பது இலங்கை வரலாற்றில் அதிகம் நிகழாதிருத்தல் என்பதும் மதங்களூடாக சமூக பண்பாட்டு உருவாக்கத்தினைப் புரிந்து கொள்ளலில் தடைகளை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக பௌத்தப் பரம்பலில் உள்ள தென்னகச் செல்வாக்கினை குறிப்பாகத் தமிழர் ஊடாட்டத்தினை கட்டுடைக்க இலங்கை வரலாற்று எழுத்து விரும்புவதில்லை. இலங்கைக்குள் அதிகம் ஊடுருவியுள்ள தேரவாத, மகாயான, வஜ்ஜிரயானப் பள்ளிகள் பண்டைய இலங்கைத்தீவில் தென்னிந்தியாவுடன் – குறிப்பாக தமிழ்பேசும் புலத்துடன் மத்திய காலத்தில் கொண்டிருந்த கொண்டும் – கொடுத்துமான தொடர்புகள் (உதாரணம் 4ஆம் பராக்கிரமபாகுவின் இராஜகுரு சோழநாட்டைச் சேர்ந்த தமிழ் மகாதேரர் ஆவர். (பக்கம் 316)) என்பது 'சிங்கள – பௌத்த' பெருங்கதையாடல் கருதி, நீக்கி வாசிக்கப்படுகிறது. குறிப்பாக தமிழர்கள் பௌத்தர்களாக இருந்தமையும், பௌத்தப் பண்பாட்டு உருவாக் கத்தினுள் தமிழ் இனக்குழுவின் பங்களிப்பும் இலங்கையில் இருப்பதையும் இலங்கையின் 'அதிகார பூர்வ' வரலாற்று எழுத்துக்கள் தவிர்த்திருப்பதை அவரது நூல் எடுத்துக் காட்டுகின்றது.

அதேபோலவே, அதிகாரபூர்வமான சிங்கள மையங்கள் என இன்று கூறப்படுமிடங்கள் உட்பட பலவேறு 'பௌத்த மையங்களில்' சைவம் நிலவியதை (உதாரணமாக தேவநம்பியதிஸ்ஸவின் தந்தையார் பெயர் முடசிவ) இருந்ததை எடுத்துக்காட்டும் இந்திரபாலா இதனூடாகச் 'சிங்கள – பௌத்த', 'தமிழ் – சைவ' எதிரிடைகளைக் கேள்விக்குள்ளாக்கி விடுகிறார்.

‘முக்கியமான முடிவுகள்’

இந்திரபாலா அவர்கள் தனது முன்னுரைப் பகுதியில் நூல் கூறும் முக்கியமான விடயங்களை முக்கியமான முடிவுகள் என்று பட்டியலிட்டுள்ளார். அவற்றையும் பிற முக்கியமான கருத்துக்களையும் இப்பகுதி எடுத்தடுக்கிப் பார்க்க முற்படுகிறது.

1) இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர், இன்றைய தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களும், கர்நாடகம் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் தென்பகுதிகளும் இலங்கையும் அடங்கியுள்ள நிலப்பகுதி ஒரு பொதுப்பண்பாட்டு வலயமாக அமைந்தது. வடக்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் செல்வாக்குகள் பரவிய வண்ணம் இருந்தன.

2. இலங்கையின் இருபெரும் இனக்குழுக்களாகிய சிங்களவரும் தமிழரும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையில் பெரும்பாலான இடங்களிற் பரவி வாழ்ந்த இடைக்கற்கால மக்களின் வழித்தோன்றல்கள் ஆவர்.

3. வரலாற்றுத் தொடக்க காலத்தில் தமிழ் பேசுவோரோ, பிராகிருத மொழி பேசுவோரோ பெருந்தொகையினராக இலங்கைக்குப் புலம் பெயர்ந்து செல்லவுமில்லை. அதே சமயம் இலங்கையில் வாழ்ந்த இடைக்கற்கால மக்கள் புதிதாக வந்தவர்களால் அகற்றப்படவுமில்லை.

4. பிராகிருத மொழிபேசும் வணிகர் இந்தியாவின் மேற்கு கிழக்குப் பகுதியிலிருந்து இலங்கைக்குச் சென்றனர். அது மட்டுமன்றி, தென்னிந்தியாவுக்கும் (அதாவது, முழுத்தென்னிந்தியா இலங்கைப் பிராந்தியத்துக்கு) இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பே வரத்தொடங்கினர். இதனைத் தொடர்ந்து, இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்குமுன் இவ்வணிகர் தென்கிழக்காசியாவுக்கும் செல்லத் தொடங்கியிருந்தனர்.

5. பிராகிருத மொழிபேசும் வணிகர் பரப்பிய செல்வாக்கின் விளைவாக மன்னார்க்குடாவின் (சேது சமுத்திரத்தின்) இரு கரையிலும் நகரமையங்கள் தோன்றி, அவற்றைச் சூழக் குறுநில அரசுகள் (சிறப்பாக மதிரையும்

தம்பப்பண்ணியும்) உருவாகின. இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்குமுன் இதை ஒத்த போக்குத் தென்கிழக்காசியாவிலும் காணப்பட்டது.

6. இடைக்கற்கால மக்கள் பல்வேறு மொழிகளைத் தம் மொழிகளாகப் பேசினர். இம் மொழிகள் அனைத்தும் வழக்கற்றுப் போக, அவற்றுக்குப் பதிலாக ஆதி இரும்புக் காலத்தில் இரு புதிய மொழிகள் ஆதிக்கம் பெறத்தொடங்கின. சமூகத்தின் உயர்குழாத்தினர் இவற்றைப் பேசியதால், அவர்களுடைய ஆதிக்கத்தின் விளைவாக இம்மொழிகள் பிற மக்களாலும் பேசப்பட்டு அவர்கள் தாய்மொழிகளாகின. இலங்கையின் தென்பகுதியிலும் நடுப்பகுதியிலும் வாழ்ந்தோர் காலப்போக்கிற் பிராகிருத மொழி ஒன்றைத் தாய் மொழியாகப் பேச, வடக்கு, வடமேற்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் வாழ்ந்தோர் தமிழ் மொழியைத் தாய்மொழியாகப் பேசத் தொடங்கினர்.

7. இலங்கையில் இருந்த பல்வேறு சிறு பண்பாட்டுக் குழுக்களையும், சமூகக் குழுக்களையும் உள்ளடக்கி இருபெரும் இனக்குழுக்களாகச் சிங்களவர் இனக்குழுவும், தமிழர் இனக்குழுவும் பரிணாமம் பெற்றமை 1200 அளவில் நிறைவுபெற்றது எனலாம். அதன்பின்னரும், மக்கள் கலப்பும் மாற்றங்களும் அண்மைக் காலம்வரை நடைபெற்றன.

8. 1200இன் பின்பு புவியியல் அடிப்படையிலும் இரு இனக்குழுக்களும் பிரிந்து போவதையும் காணமுடிகின்றது (பக்கம் 66–67).

9. நூல் முழுவதும் ஊடாடிச்செல்லும் முக்கியமான ஒரு விடயம் பண்டைய இலங்கைத் தீவு என்பது அதனுடைய அனைத்து அம்சங்களிலும் தமிழர், சிங்களவர் என்ற இருபெரும் இனக்குழுக்களினதும் கலப்பொட்டின் (hybridity) வெளிப்பாடாக இருத்தல் என்பதாகும். இவ்வகையில் பன்மைத்துவமும் வேறுபாடுகளின் தனித்துவமும் நிரம்பிய ஒரு பெரும் பரப்பாக இலங்கைத் தீவு இருந்தது.

## முடிவுரை:
## கொழுந்துவிட்டெரியும் தீயின் நடுவிலொரு யாத்திரை

இனக்குழுமங்களுக்கு இடையிலான முறுகல் என்பது பெரும்போராக மாறி, தீவே இரத்தச் சகதியாகியுள்ள இலங்கையில் வரலாற்றுத் தடயங்களை

அறிவியலின் துணைகொண்டு வாசித்தல் என்பது மிகவும் சிரமங்கள் நிறைந்தவொரு காரியமாகும். துரதிர்ஷ்டவசமாக இலங்கையின் வரலாற்றெழுத்துக்கள் இந்த நிலைமைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இலங்கையின் 'அதிகார பூர்வமான' வரலாற்றெழுத்துக்கள் என்பன சிறுபான்மை இனக்குழுக்களை ஒடுக்குமொரு கருவியாகியுள்ளன. பாடசாலைப் பிள்ளைகளுக்கு விநியோகிக்கப்படும் பாடப்புத்தகங்கள் தொடக்கம்[6], பல்கலைக்கழகம் உட்பட அனைத்து வரலாற்றுக் கல்வியின் பெரும் பரப்பெங்கும் இந்தநிலைமையே விரவியுள்ளது. இவ்வகையான நிலைமைகளுக்குள் வரலாற்றை 'வரலாறாகக்' கூறுதல் கடினமானது. பல வகைகளிலும் கலாநிதி இந்திரபாலாவின் மேற்படி நூல் தேசியவாதிகளுக்கு உவப்பான ஒன்றாக இல்லாமற் போவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமுடையது. ஆகையினாற்றான் இந்நூல் கொழுந்துவிட்டெரியும் தீயின் நடுவிலொரு யாத்திரையாகியுள்ளது.

## அடிக்குறிப்புக்கள்

1. *இனவியல் முற்கற்பிதம் (racial prejudice) : உயிரியல் ரீதியாக இனம் என்பது 'genus' மற்றும் 'species' என்பனவற்றை குறிப்பது. இனம் தொடர்பான புலமை வாசிப்பில் முக்கிய இடத்தை பௌதீக மானுடவியல் கொண்டிருக்கிறது. இவ்வகையில் மனித குலத்தை பிரதானமாக அதன் உடல்சார் பண்புகளின் அடிப்படையாக பௌதீக மானுடவியல் பிரித்துப் பார்க்கிறது. பெரும்பாலான பௌதீக மானுடவியலாளர்கள் மனித குலத்தை நான்கு பெரிய இனங்களாக வகுத்துப் பார்க்கின்றனர்.*

   *ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேற்படி இனம் தொடர்பான கருத்தாடலானது சமூக - அரசியல் பின்புலத்திலிருந்து மேலாண்மை அல்லது உயர்வுச் சிக்கல் X தாழ்வுச்சிக்கல் என்பனவற்றிற்கான பெருண்மையாக பிரயோகிக்கப்படுகிறது. டாவினின் பரிணாமவாத கோட்பாடே பெரியளவில் இனவியல் முற்பற்பிதத்தை உருவாக்கிய மூலமாகும். 'சமூக டாவினிய வாதம்' என அழைக்கப்படும் டாவினின் வழியான இனம் - இனவியல் கருதுகோள்கள் மிகப் பிரதானமாக இரண்டு அடிப்படைகளைக் கொண்டிருந்தது. முதலாவது, இரண்டு வாழும் உயிர்கள் ஒன்றை ஒன்று ஒத்திருப்பதில்லை; மற்றையது ஒன்றின் பண்பானது அதன் பரம்பரை வழி கைமாற்றப்படுகிறது (அகிலன் 2001:15-20).*

2. *இனம் தொடர்பான அறிவியல்பூர்வமான கருத்தாக்கங்கள் அடிப்படையில் உடல்சார்ந்த பண்புடையவை. இனக்குழு என்பது ஒருவருடைய சமூகம்*

சார்ந்த பண்பை அல்லது இயல்புகளை (மொழி, சமயம், வதிவிடம் சார் பௌதீக - அபௌதீக அம்சங்களை) குறிக்கும் ஒரு செல்லாகும். இனக்குழுக்களுக்கு உரிய குறிப்பிடத்தக்க அம்சங்களை மொழி - சமயம் முதலியவற்றை கூறுகின்றபோதிலும் அடிப்படையில் ஒருநபருடைய சுயநோக்கே அதனை தீர்மானிக்கும் அடிப்படைக் காரணி (பார்க்க இந்திரபாலா 2006: 24, 25).

3. ஆரிய - சிங்களச் சட்டகம் : காலனிய கால வரலாற்று ஆசிரியர்கள், காலனிய இனவியல் முற்கற்பிதம் மற்றும் பிரித்தாளும் தந்திரம் ஆகியவற்றின் பின்னணியில் சிங்களவர்களை ஆரியர்கள் என்றும், தமிழர்களை திராவிடர்கள் என்றும் வரையறுத்தனர். இன்றுவரை இலங்கையின் பிரதான வரலாற்று எழுத்தென்பது சிங்களவர்களை ஆரியர்கள் என்றே அறிமுகப்படுத்துகிறது.

4. ஆரிய X திராவிட இனச்சட்டகம் : மானுடவியல் ரீதியாக பிரதானமாக முன்மொழியப்பட்ட இனம் தொடர்பான அடிப்படைப் பிரிவுகள் நான்காகும். ஒஸ்ரலொயிட், கொக்கசைட், நீக்றோயிட், மொங்கலைட் என்பனவே அவையாகும் (ஸ்ரீபன் 1983 : 40-48) மேற்படி கொக்கசைட்டின் கிளைகளுள் ஒன்றான பலியோ மத்தியதரைப் பிராந்திய இனக்குழுமம் சார் பிரதான மொழிக்குடும்பமாக திராவிட மொழிக்குடும்பமும், இந்தோ - ஐரோப்பிய இனக்குழுமம் சார்ந்த மொழிக்குடும்பமாக ஆரிய மொழிக்குடும்பமும் எடுத்துக்காட்டப்படுகிறது. மேற்படி மொழிக்குடும்பப் பிரிவுகளை இனவியல் சார் முற்கற்பித வழி ஆரியர், திராவிடர் எனும் இனங்களாக கற்பிதம் செய்தனர். அதுமட்டுமன்றி ஆரிய மேலாண்மை வாதமும் இதனூடாக மேற்கிளம்பியது (அகிலன் 2001: 26).

5. முண்டாமொழி : இது ஒஸ்றியோ ஆசிய மொழி எனப்பட்டது. இது கிழக்கிந்தியப் பகுதிகள் பர்மா, வியட்நாம், தாய்லாந்து, கம்போடியா முதலிய மொழிகளின் அடிப்படையாகும்.

6. 'சமூகக்கல்வியும் வரலாறும்' : எனும் பெயரில் தரம் 6 தொடக்கம் 10 வரைக்குமான பள்ளிப் பிள்ளைகளுக்கான நூல் வரிசையில் இடம்பெறும் இலங்கை வரலாறு தொடர்பான பகுதிகளை வரிகளாகவும், வரிகளுக்கு இடையாகவும் வாசிக்குமொருவர் இதனைத் தெள்ளத்தெளிவாக இனங்காண முடியும். தரம் 10இல் கண்டி இராசதானி தொடர்பான பகுதியில், குறிப்பாக கண்டி இராசதானியின் உருவாக்கம், அமைப்புத் தொடர்பான எடுத்துரைப்பு மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவை. இந்திய - தென்னிந்திய எதிர்ப்பு, தமிழ் விரோதம், ஆணாதிக்க நிலைப்பாடு, சிங்கள மேன்மை வாதம் -

மேலாதிக்கம் முதலியவற்றால் அவை பின்னப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது (பார்க்க: 2000 : 46-76). சில உதாரணங்களைக் கீழே பார்க்கலாம். அவை ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதையும், வரலாற்றை தமது நோக்கு நிலைக்கேற்ப மாற்றிக் கூற முற்படுவதனையும் அவற்றில் காணமுடிகிறது.

> "சிறி வீரபராக்கிரம நரேந்திரன் சிங்கள இராச வம்சத்து அரசனாக விளங்கினான் என குறிப்பிடப்படுகின்றது.
>
> இரண்டாம் இராஜசிங்க மன்னனுடைய காலத்திலிருந்து தென்னிந்தியாவின் மயூராபுரத்திலிருந்து நாகயக்க வம்ச அரச குடும்ப இளவரசிகளை வரவழைத்து விகாகம் செய்து கொள்ளும் வழக்கம் அரசர்களிடமிருந்து வந்தது. நரேந்திர சிங்க மன்னனின் தாயும், மனைவியும் மாத்திரமன்றி தந்தையும் தாயும் மயூராபுரத்து பெண்களாவர்.... (பக்கம் 72).

இதேவேளை கண்டி இராசதானியின் வீழ்ச்சி தொடர்பாக மேற்படி நூல் பின்வருமாறு கூறுகிறது.

> "ஆயினும் ஒரு அன்னிய அரச பரம்பரையினர் கண்டியில் ஆட்சி உரிமையை பெற்றமை, இந்த நாட்டின் இறுதித் தேசிய இராச்சியமான மலையக இராச்சியத்தின் வீழ்ச்சிக்கும் பலவகையிலும் காரணமாக அமைந்தது..." (பக்கம் 73).

## உசாத்துணை


Ahilan , P
2001. Race & Art History. Baroda : University of Baroda. (Unpublished Master Degree Thesis)

Glazer, Nathan & Daniel , P.Moynihan(eds)
1975. Ethnicity. Theory & Experience U.S.A : Harvard University Press.

Stephen, Fuchus
1983. The origin of man and his culture. New Delhi : Routldge.

Thapar, Romila
1975. Past & prejudice. New Delhi : National book trust.

2000. சமூகக்கல்வியும் வரலாறும் - தரம் 10. காலி : கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.